Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953. விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது — தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எச] யாழ்ப்பாணம்:- சுபகிருதுஞு தை மீ ருஉ வெள்ளிக்கிழமை (18 January, 1963) [இல-சக]

## மக்கள்குலத்தைஅறவழிச்செலுத்தும் சுவாமி விவேகாநந்தர்

—0—

### உலகெலாம் கொண்டாடும் கீர்த்தியே அவர் கடவுட் தன்மைக்குச் சான்று

சுவாமி ஸ்ரீ சர்வாதீதாநந்தா
இராமகிருஷ்ண மிசன்மடம் கதிர்காமம்

இந்திய நாட்டிலே சிம்லாவில் புகழ்பெற்ற தத்தர் குடும்பத்தில் சுவாமி விவேகாநந்தர் அவதரித்தார். அவருக்குப் பெற்ருேர் இட்டபெயர் நரேந்திர தத்தர். தந்தையாகிய விஸ்வநாத தத்தர் எவரிடத்தும் பேதம் பாராட்டாத, பேரன்பும், தயாள சிந்தையும், தருமகுணமும் படைத்தவர். இவரது இல்லக்கிழத்தி எக் காரியங்களிலும் மன இயைவோடு ஒத்துழைத்து வந்தார். எப்பொழுதும் இந்து மகளிருக்குரிய பொறுமையோடமைந்த தெய்வ நம்பிக்கையும் திக்கற்ற ஏழைகளுக்கு துணைபுரியும் அருங்குணமும் அமைந்தவர். இத்தகைய பெற்ருேருக்குத்தான் இன்று விவேகாநந்தர் என்றழைக்கப்படும் நரேந்திரர் 1863ம் வருடம் ஜனவரி மாதம் 12ந் திகதி திங்கட்கிழமை அவதரித்தார்.

ஏழு வயதாக இருக்கும் பொழுதே இவருடைய அதீத ஞானத்தை ஆசிரியர்களும், பள்ளித்தோழர்களும் தெரிந்துகொண்டனர். இளமைப் பருவத்தில் அவர் செய்த குறும்புகளே அவைகளைப் புலப்படுத்தின. ஒருமுறை பாடம் படிப்பித்துக்கொண்டிருந்த ஆசிரியர், பேசிக்கொண்டிருந்த நரேந்திரரிடமும், அவரது நண்பர்களிடமும் தான் கூறியவற்றை திரும்பக் கூறும்படி கேட்டார். எல்லோரும் வாய்மூடி மௌனியானுர்கள். இருவகையிலும் செலுத்தி அவதானிக்கக்கூடிய சக்தி பெற்றிருந்த நரேந்திரர் எல்லா மாணவர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திஞர். ஆசிரியர் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் சரியான பதில்களைச் சொன்னுர். இவர் ஞான சக்திதான் என்னே.

இவர் ஆங்கிலத்தில் மிகவும் பேரார்வம் காட்டி வந்தார். இதைக் கண்டு எல்லோரும்வியப்படைந்தனர். இந்தவேளையில்தான் அஞ்சாத ஆண்மையும், பயமுறுத்தல்கட்குப் பணியாத தன்மையும்எடுத்துக்காட்ட ஒரு சம்பவம் நடந்தது.

(தொடர்ச்சி 2 ம் பக்கம்)

### பொங்கல் விழா

குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் 14-1-63 திங்கட்கிழமை பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது.

### நற் சிந்தனை

மணிவா சகந்தரு
மந்திர மோதினுல்
பிணிமூப் பில்லாப்
பிரம மாகுதும்.

### இலவச சமயதீட்சை

—0—

தை மீ 21உ (3-2-63) ஞாயிற்றுக்கிழமை 7 மணி முதல் சுண்டிக்குளி தல்லாலை ஸ்ரீ. விநாயகராலயத்தில் அ. இ. பொது சன சேவைச் சங்கத்தின் ஆதரவில் பிரம்மஸ்ரீ, ஆ. கனக சபைக் குருக்களவர்களால் இலவச சமயதீட்சை நிறைவேற்றிவைக்கப்படும்.

தீட்சைபெற விரும்புவோர் ஆசாரசீலர்களாகக் குறித்த நேரத்திற் சமுகமளிக்கும்படி வேண்டிக் கொள்ளப்படுகின்றனர்.

உ

ஆங்கணைந்தசண்டிக் கருளியன்று
தன்முடிமேலலர்மாலையளித்தருேன்றும்
பாங்கணைந்துபணிசெய்வார்க்கருளியன்று
பலபிறவியறுத்தருளும்பரிசுந்தோன்றும்
கோங்கணைந்தகூவிளமுமதமத்தம்பூங்
குழற்கணிந்தகோள்கையொடுகோலந்தோன்றும்
பூங்கணைவேளுருவழித்தபொற்புந்தோன்றும்
பொழிற்கெளும்பூவணத்தெம்புனிதனுர்க்கே.

x x x

ஊனுகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானுதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
ருணுகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளாஞன்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

## திருக்கோவையார்

—:0:—

[அணிமையில் நடைபெற்ற அ. இ. சைவ மகாநாட்டில் இரண்டாம் நாளன்று கலந்துகொண்ட வித்துவான், சைவப் புலவர், திரு. இ திருநாவுக்கரசு அவர்கள் ஆற்றிய உரை]

முற்ருெடர்—3

சந்தனமும் சண்பகமும் மணம்கமழும் குறிஞ்சி நிலச் சோலையிலே அணிதிகழருவியின் ஆடகப்பாறைமேல் மணிதிகழ் முழவின்கண் இரட்ட ஓர் இளமயிலாடுதல் நோக்கி நின்ற தலைவியைத் தழைவிழைதக்கன கொய்துமென்றும் - கண்ணிநறு நாற்றத்தன கொய்துமென்றும் தாதுமேதக்கன தொடுத்துமென்றும் மயிலொடு மாருய் ஆடுதுமென்றும் குயிலொடு மாறிக் கூவுதுமென்றும், தாரகை நடுவட் தண்மதி போல நிறைந்து வந்த ஆய வெள்ளத்து நடுவே விளங்கிய தலைவியைப் பிரிந்து தோழியரும் ஆயவெள்ளமும் நீங்கப் "பான்மதி உவரியீன்ருலெனவும், இள ஞாயிற்றின் ஒளிகிளர் திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் - ஈசா தில்லைக் குருவளர் பூங்குமிழ் கோங்கு பைங்காண் கொண்டு ஓங்கு தெய்வமருவளர் மாலையானது உருவளரும் காமனது வென்றிக்கொடி நுதல் விழிக்குத் தோற்று உருவிழப்பதன்முன் மதயானையாய் நின்றுயர்ந்தது போல நடந்தால் அன்னநடை வாய்க்கப்பெறும் என்று கற்பனை செய்யக்கூடியதாகவும் "சற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல் சுமந்து விற்குவளை பவழமலர் இணர் பூத்த விரைக்கொடியோ அற்புதமோ - அதிசயமோ - அறியேன் என்று அதிசயித்துக் கூறக்கூடியதாகவும் கண்குளிரத் தலைமகன் தலைவியைக்கண்டான். கண்ட மாத்திரத்தே திருப்பெருந்துறையில் ஞானசிரியனுகி எழுந்தருளிய செந்தமிழ்ப் பரமாசாரிய குருமூர்த்திகளின் பூவார் திருவடிகளைச் சென்னி மன்னித்திகழச் சூட்டி "அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன் - யாது நீ பெற்ற தொன்றென்பால்?"

"உனக்கில்லாததோர் வித்து மேல் விளையாமை என் வினை ஒத்தபின் கணக்கில்லாத் திருக்கோலம் நீவந்து காட்டினுய்கழுக்குன்றிலே' என உளமகிழ்ந்து இறைவனுேடு ஆவியாக்கை யான் எனது என்ற யாதுமின்றி அற்று "தாடலை போற் கூடி' யானுர் என்னுமால் ஞானங்களார் என்னை யார் அறிவார். வானோர் பிரானென்னை யாண்டிலனேல் ... ... என்று தெளிவு பெறுதற்கான ஊழ் பழவினைத் தொடர்பு - விதிவந்து கூட்டத் திருவாதவூரடிகளைப் பாண்டியன் குதிரை கொள்ளுமாறேவினுனே - அதே ஊழ்போலவே ஒப்பாரும் மிக்காரும் அற்றவனுய்ப் பொறிவாயில் ஐந்தவித்தானது பொய்தீர் ஒழுக்க நெறி நின்றவனுகிய தலைமகன் அச்சோலையில்,

பிறப்பே குடிமை
ஆண்மை யாண்டோடு
உருவு நிறுத்த காமவாயில்
நிறைந்து இயைபு புலனே
இழைபனு அப்
பொருந்தக் கூறிய பத்தமுகும்

நிறையப் பெற்றவளாகிய தலைவியை நோக்கித் தன்னந்தனியளாகக் காண்கிருன். காணச்செய்தது விதி என்பதனை உணர்கின்ருன். அவ்வாறு காட்டியவழிப் புனல் போன வழிப்புல் சாய்ந்து கிடப்பதுபோல நாண் முதலிய குணங்கள் சாய ஈடும் எடுப்புமற்றுக் கற்புடுத்து - அன்புமுடுத்து நாண் மெய்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

### முந்நெறிஞானமும் மோனமும் நீ

★

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: கேதாரகௌளம் :: தாளம்: ரூபகம்

பல்லவி

உள்ளங்கோள் ளைகொள்ளும் பரமா அன்பர்
உனது பெருமை உரைக்கும் தரமா (உ)

அனுபல்லவி

அள்ளியள்ளி யுண்ண அருட்கலை தந்தாய்
அண்டசராசர மாீகநி றைந்தாய் (உ)

சரணம்

அப்பன்நீ அம்மைநீ அன்புற வோரும்நீ
அத்தமும் வாழ்வும்நீ அரும்மனை மைந்தர்நீ
முப்பொருள் வித்தும்நீ முத்திப் பழமும்நீ
முந்நெறி ஞானமும் மோனமும் நீயாகி (உ)

## மகா கும்பாபிஷேகம்

சரித்திரப் பெருமையும், புராதனச்சிறப்பும்நிரம்பியது. திருக்கோணமலை கோணேஸ்வரர் ஆலயம். இந்த ஆலயத்தின் தொடக்கம் சரித்திர காலத்துக்கு முற்பட்டது. இவ்வாலயத்தின் இயற்கை வனப்பு நிறைந்த சூழல், புராணங்கள், கல்வெட்டுக்கள், கதைகள், சரித்திரங்கள் எல்லாம் இத்திருப்பதியின் புனிதத் தன்மையையும் அருள் உண்மையையும் எடுத்து விளக்கிய காரணத்தால் ஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் இந்தத்தலத்துக்குத் தேவாரத் திருப்பதிகம்பாடி அழியாப் புகழைத் தந்திருக்கின்ருர். இக்கோயிலில் எதிர்வரும் 3-4-63ல் மகாகும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது.

—:—

### பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பயிற்சி வகுப்பு

மேற்படி பயிற்சி வகுப்பு ஒன்று குரும்பசிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் 12-1-63 சனிக்கிழமை மாலை 7மணியளவில் பகுதிக் கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. ப. நோ. கூட்டுறவுச்சங்க குரும்பசிட்டி அங்கத்தவர் இவ்வகுப்பில் சேர்ந்து படிக்கின்ருர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சுபகிருது ௵ தை ௴ ௫ ௳ வெள்ளிக்கிழமை

## விவேகாநந்தர் விழா

ஒழுக்கத்தால் உயர்ந்த பேரறிவால், உலகியலில் ஈடுபடாத ஒண்மையான வாழ்க்கையால் இறைநெறியில் இடைவிடாது நின்ற துறவுப் பண்பால் உத்தமர் என்றுயாவராலும்புகழ்ந்து போற்றப்பெறும் சுவாமி விவேகாநந்தர் அவர்களின் நூற்றாண்டு விழா கலங்கித் தடுமாறும் காசினிக்கோர் ஆறுதலைக் கொடுக்கும் ஊக்க நிகழ்ச்சியாகும். தவத்தாற் சால்புசான்ற பேரறிஞர்களுக்குப் பிறப்பிடமாகிய பாரதநாட்டில் இப்பொழுது நடைபெறும் நிகழ்ச்சிகளால் மக்கள் அல்லற்படும் வேளையில் ஞானச்சுடராய் விளங்கிய சுவாமி விவேகாநந்தரின் நினைவு விழா நெஞ்சைத் திடப்படுத்தி நேர்மை நெறியால் எவ்வித தீமையையும் நீக்கும் அமைதியான மனவூக்கத்தை உண்டுபண்ணும் பான்மையில் உதவுகின்றது.

“ஒன்னார்த் தெறலும்
உவந்தாரை யாக்கலும்
எண்ணிற் றவத்தால் வரும்”

என்ற பொய்யா மொழிப் பண்பு பாரதநாட்டின் பண்பு. ஆகவே முனிவர்கள் யோகிகள் தபோதனர்கள் பல்லோரின் நல்லாசி பெற்ற பாரதநாட்டில் அப்பேரறிவுச் சுடர்களின் ஒளி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விழாவாகப் பரப்பப்பெறுவதும் அந்தப் பண்பின் பான்மையாகும். சுவாமி விவேகாநந்தரின் தூய தொண்டு பூவுலகெங்கணும் பொலிந்து விளங்கிய பெற்றியது. புறமதத்தார் மத்தியில் இந்துசமயச் சால்பை எடுத்துச் சொற்சுவை பொருட் பொலிவு துலங்க விரித்துரைத்த சுவாமி விவேகாநந்தர் உலகப் பொது உடைமையாய் எல்லோராலும் எட்டுத் திக்குகளிலும் குருவாகக் கைக்கொள்ளப்படுகின்றனர். இணையில்லாத் தத்துவ நெறியாகவுள்ள இந்து சமயத்தை மேனாட்டாருக்கு ஆங்கில மொழியில் அழகாக உரைத்துப் பொருள் விரித்த வித்துவசிரோமணி சுவாமி விவேகானந்தர் அந்நாடுகளிலே மக்கள் பலரை நல்லறத்தில் ஒழுக வைத்தார் என்றால் அவரின் அறிவின் செறிவைக் கூறவும் வேண்டுமோ.

இந்த நூற்றாண்டு விழா இந்தியநாட்டுக்கு மட்டுமல்ல ஆசிய தேசங்களுக்குத் தானுமல்ல அவனி முழுவதுக்குமே அரிய விழிப்புணர்ச்சியை அளிக்கும் பெருநாளாகும். மெய்யறிவு என்ன, நன்னெறியென்ன, சைவச்சால்பென்ன, ஒழுக்க வாழ்க்கையென்ன என்றின்னோரன்னவற்றை ஆய்ந்துணர்ந்து மக்கள் நல்ல வழியைக் காண்பதற்குரிய விழா இதுவாகும்.

## மக்கள் குலத்தை அறவழிச் செலுத்தும் விவேகாநந்தர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவர் இழிந்த குணம் படைத்தவர், பிள்ளைகளைத் திருத்துவதானால் சரீர தண்டனை கொடுப்பது நல்லதென எண்ணம் கொண்டவர். தண்டனைக் குரியவர்களை தனியாகப் பிரிக்கும்போது நரேந்திரர்சிரித்துவிட்டார். இரக்கமற்ற ஆசிரியர் நரேந்திரரை நன்றாக அடித்துவிட்டார். இனிமேல் தன்னை நோக்கி சிரிக்கமாட்டேன் என்று சொல்லும்படி வற்புறுத்தினர்.

நரேந்திரர் அதற்கிணங்க மறுத்தபோது மேலும் அடி விழுந்ததோடு மட்டுமின்றி அவர் காதை நன்றாகத் திருகி இழுத்துக் கொண்டு போய் வாங்கின் மீது ஏற்றினர். காதைப் பிய்த்துக்கூட அவ்வாறு சொல்வதற்கு மறுத்தார்.

“என்ன காதைப் பிடித்துத் திருகுகிறீர்? நீர் யார் என்னை அடிப்பதற்கு? ஜாக்கிரதை; பழையபடியும் என் காதைத் தொடாதீர்!” என்று ஆக்ரோஷத்தோடு கண்ணீர் பொல பொல வென்று வழிந்தோடச் சொன்னார்.

நரேந்திரர் ஸ்கொட்டிஸ் மதக் கல்லூரியில் தான் கல்வி பயின்று பி.ஏ. பட்டதாரியானார். இக்கலாசாலையில்தான் பேராசிரியர் வில்லியம் ஹேஸ்டியின் வாயிலாக ஸ்ரீ. இராமகிருஷ்ண பரமஹம்ஸரைப் பற்றிக் கேள்வியுற்றார். வேட்ஸ் வேத்தின் கவிதையொன்றிலுள்ள இயற்கை அழகின் பரவச நிலையைப்பற்றி மாணவர்களுக்குக் கூறிக் கொண்டிருந்தார் பேராசிரியர் வில்லியம். மாணவர்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை, பேராசிரியர் “இத்தகைய அனுபவம் மனத் தூய்மையின் பேறால் வருவதொன்றாகும். சில குறிப்பிட்ட நோக்கத்தில் சித்தம் நிலைக்க வேண்டும். குறிப்பாக இக்காலத்தில் இது மிகக்குறைவு. இத்தகைய அனுபவம் படைத்த ஒரே ஒரு மனிதனைத்தான் நான் கண்டிருக்கிறேன். அந்த மனோவலிமை படைத்த மனிதர் தக்ஷிணேசுவரத்திலுள்ள இராமகிருஷ்ணபரமஹம்சராவர். நீங்களே அங்கு போய்ப்பார்த்தால் இந்த உண்மை புலனாகும்” என்று சொன்னார். நரேந்திரர் தனது எதிர்கால ஞானகுருவைப்பற்றி இங்குதான் கேள்விப்பட்டார்.

மெய்ப்பொருளைக் காண வேண்டுமென்று அவாவுற்றார்; சிறந்த ஆத்மார்த்த போதகர்களைக்கண்டு நீவிர் கடவுளைக் கண்டதுண்டா எனக்கேட்டுத் தகுந்தபதில் கிடைக்கவில்லை. 1881-ம் வருடம் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரைச் சந்தித்த போதுதான் சிந்தை தெளிவாகியது;

ஸ்ரீ. இராமகிருஷ்ணர் போதனைகளைக் கற்றுவருங் காலத்தே நிகழ்ந்த நரேந்திரர் வாழ்க்கையைப்பற்றி உண்மையும், கற்பனையும் கலந்த கதைகள் நடமாடுகின்றன. பரமஹம்சருக்கும் நரேந்திரருக்கும் இடைப்பட்ட அற்புத விவகாரமொன்றும் தெரிந்து கொள்வதற்கில்லை. ஆனால் பரமஹம்சர் விவேகானந்தர் என்ற ஈருயிரையும் ஓருயிராகவே எப்பொழுதும் நினைவு கொள்ளுகிறோம்.

நரேந்திரர் தனது ஞானாசிரியரிடம், “குருவே, தாங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?’ என்ற வினாவோடுவந்தவர், அவர்மூலம் கடவுளைக்கண்டு ஞான ஒளி பெற்றார்.

இவர் உலகுக்களித்த மெய்ப்பெரு வார்த்தைகள் நான்கேயாகும்.

ஒவ்வொரு ஜீவான்மாவும் உண்ணிறைந்த தெய்வத்தன்மை உடையது.

அகத்தேயும் புறத்தேயும் சார்ந்து நிற்கும் பிரகிருதியை அடக்கி உண்ணிறைந்த தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவதே சமயங்களின் நோக்கமாகும்.

கருமம் பூசனை, பிராணனை இலயப்படுத்துதல், ஞான நூலாராய்ச்சி என்னும் இவற்றினுள் ஒன்றினாலோ, பலவற்றினாலோ, யாவற்றினாலோ இதனைச் செய்து நிறைவேற்றி முத்தனாகுக!

இதுவே சமயத்தின் முழு உண்மை; கொள்கைகளும், கருமங்களும், நூல்களும் பிறவும் இதற்கு உதவிபுரியும சாதனங்களாய் அமைந்து நிற்பன.

விவேகாநந்தர் தம் தாய் நாட்டிற்கும் உலகிற்கும் ஆற்றிய தெய்வப் பணி காலத்தால் குறுகியதேயாயினும், அதன் சிறப்பை இனிவரும் மக்கள் மேன்மேலும் தேர்ந்து உய்வார்கள் என்பது திண்ணம். இவரது அறிவுரைகள் சமூகத்துக்கு ஆறுதலை அளித்து மக்களை அறத்துறையில் நிற்கும் வண்ணம் உறுதி பயக்கும். உடைந்த உள்ளங்களுக்கு ஒருபெரும் சக்திக் கனலை எழுப்பும். இன்று உலகெலாம்கொண்டாடப்படும் இவரது நூற்றாண்டு விழாக்கள் இவரது அறிவுரையின் சக்தியினை எடுத்துரைக்கின்றன. இவரது அறவுரைகளை நாம்பின்பற்றி உய்வோமாக.

வாழ்கவிவேகாநந்தர் பக்தி.

## சமயம்என்பது ஆன்மாவைக் கடவுளுடன் சேர்ப்பது

——:0:——

[அண்மையில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் நாவலர் மண்டபத்தில் நிகழ்ந்த அ. இ. சைவமகாநாட்டில் சமயப்பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் வாசித்த வரவேற்புரையின் இறுதிப்பகுதி.]

(முற்றொடர்—2)

‘ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது’ என்றமுதுமொழிக்கிணங்க இக்காலச் சமயக் கல்வி வெறும் புத்தகப் படிப்பளவிலேயே அமைந்திருக்கின்றது. அத்தகைய சமயக் கல்வி பிள்ளைகளுக்குப் பிரயோசனப்படாது. சமயக் கல்வி சாதனையுடன் இணைந்திருக்கவேண்டும், சமயசாதனைகளைக் கைக்கொண்டொழுகும் ஆசிரியர்களே சமயக் கல்வியைக் கற்பிக்கத் தகுதியுடையவர்கள்.

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆங்கிலேயர் நமது நாட்டை ஆண்ட காலத்தில் நமது மக்கள் வயிற்றுப் பிழைப்புக்காக கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தார்கள். இக்காலத்திலும் சிங்கள அரசாகம் நடைபெறுகின்ற தென்றெண்ணி அரசாங்கத்தினிடமிருந்து பட்டம் பதவி முதலிய சலுகைகளைப் பெறலாமென நம்மவர்கள் சிலா பௌத்த மதத்திற்சேர விரும்புகிறார்களாம். அவர்களுக்குச் சமயத்தின் நோக்கமின்னதென்பது தெரியாது. அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தை யடையச்செய்வதே சமயத்தின் நோக்கம் சமயம் என்பது ஆன்மாவை கடவுளுடன் சம்பந்தப்படுத்துவது. இந்த உண்மையை உணர்ந்தவர்கள் மதம்மாறமாட்டார்கள்.

பாரதநாடு இப்பொழுது சீனாதேசம் தொடுத்துள்ள எல்லைச் சண்டையினால் கலங்கிக்கொண்டிருக்கிறது. பாரதநாடு ஞானபூமி. உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும் பண்டைக்காலந் தொடக்கம் ஞானத்தை வழங்கிய ரிஷிகள் தோன்றிய தேசம் பாரதநாடு. அத்தகைய புண்ணிய பூமிக்கு இடுக்கண் ஏற்பட்டால் அது எல்லா நாடுகளையும் பாதிக்கும். நாங்கள் எல்லோரும் பாரதநாடு வெற்றி பெறவேண்டுமென ஆண்டவனை மனமார வழிபடவேண்டும். பாரதநாடு புரிகின்ற போருக்கு நாங்கள் இயன்ற சரீரவுதவியோ பொருளுதவியோ புரிய வேண்டும்.

நவசீனாவின் நாகரிகம் நாத்திகத்தை யடிப்படையாகக் கொண்டது பாரதநாட்டின் நாகரிகம் தெய்வீகத்தையடிப்படையாகக் கொண்டது. ஆகவே சீனாவின் கொள்கை உலகில் பரம்புமானால் உலகெங்கும் நாத்திகமே பரவும். அதனால் மக்கள் நிரீச்சுரவாதிகளாய் மாறி பிறவிப் பயனை யடையாது ஊனுடலுக்கிரை தேடி வாழ்ந்து பின் மாநரகிற் புகுவார்கள்.

பாரதநாட்டுக்கும் ஈழநாட்டுக்கும் சமயம் மொழி கலாச்சாரம் நாகரிகம் முதலியவகைகளினால் தொடர்புண்டு அத்தொடர்பினால்தான் பௌத்தர்களும் இந்துக்களும் பாரதநாட்டிலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு வருடந்தோறும் யாத்திரை செய்து வந்தார்கள். ஈழநாட்டு மக்கள் அக்ஷேத்திரங்களுக்கு தங்கள் பக்தியின் பெருக்கால் ஆன்மலாபத்துக்காகக் காணிக்கைகளைச் செலுத்தி வந்தார்கள். இப்பொழுது அரசாங்கம் செய்துள்ள கட்டுப்பாடுகளினால் அவர்கள் அங்குள்ள க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்யவோ அல்லது காணிக்கைகளைச் செலுத்தவோ முடியாத நிலைமையிலிருக்கின்றார்கள். இக்குறைகளை நீக்கும் வண்ணம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுந் தீர்மானங்களும் இம்மகாநாட்டில்நிறைவேற்றப்படும். இத் தீர்மானங்களை நிறைவேற்றுவதினால் மாத்திரம் எங்கள் நோக்

தொடர்ச்சி 3ம் பக்கம்

நல்லைக்கிர்த்தனம் — 28.

## ஐந்து போறிகளிலே மந்தி மனம்!

★

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : சுபபந்துவராளி : தாளம் : ஆதி

பல்லவி

இனியேனும் இரங்காயோ முருகா குஹா
கனியேஷண் முகனேயுன் கழல்தாராய் வடிவேலா

அனுபல்லவி

பணியாடும் அரன்சேயே புவிமீதில் கதிநீயே
இனிதாடும் மயில்மீதில் இதுவேளை வருவேயே.

சரணம்

ஐந்து போறிகளிலே மந்திக் குரங்கு மனம்
வந்து விழுந்துமிக நொந்து வருந்தும் தினம்
முருகன் [illegible] வந்திடும் கந்த வனம்
தந்து [illegible] சிந்தும் நல்லையின் தனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவையார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூசி - நற்குண நற்செய்கை பூண்டவளாகிய தலைவிக்கும், ஊழின் வழியே உள்ளம்பற்றத் தலைவி நோக்கவே இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர். அவ்வாறு உள்ளப் புணர்ச்சி கொண்ட தலைவியும் முன்னே வந்தெதிர் தோன்றும் முருகனே வருகொளியார் தன்னேரில் மாரனே தார்மார்பின் விஞ்சையனே என்று ஐயுற்றுத் தன்னுள்ளம் பண்புடையது. தன்னுள்ளத்தை நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலிய நான்கு குணங்களையும் சாய்த்து மிக்கு விழுங்கி நிற்கும் வேட்கைக்குரியவனை தலைவனும் மிக்கவனேயாதல் வேண்டும் எனத் தெளிவுற்று இருவரும் தெய்வத்திறம் சிந்திப்பராயினர். தலைவி சொல்லாடாள், தலைவன் சொல்கின்றான்.

வளைமயில் கீழ்கடல் நின்றிட மேல்கடல் வானுலகத்தின், துளைவழி நேர்கழி சேர்த்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலை, கிளைவயின் நீக்கிஇக் கொண்டையர் கண்ணியைக் கொண்டுதந்த, விளைவையல் லால்விய வேன்நயவேன் தெய்வம்மிக்கனவே.

என்று உவகைபூத்த தலைவன் சிந்திக்கின்றான். கிழக்குக்கடலில் வீசியெறிந்த நுகக்கழி (தடி) ஒன்று மேற்குக்கடலில் உள்ளதோர் நுகத்திற்சென்று கோத்தல் - எத்துணை நிகழமுடியாததோர் அதிசயமோ அதுபோலவே எழுமையும் தொடர்ந்த உழுவல் அன்புடையராதலால் தம்முள்ளம் "செம்புலப்பெயல் நீர்போன்ற அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" என மொழிந்து அதனைச் செய்த விதியை அன்றி நான் வேறு தெய்வத்தை வியந்துரைக்க மாட்டேன் என மொழிகின்றதாகத் துறை அமைத்துத் திருப்பெருந்துறையில் தன் உள்ளப்புணர்ச்சி நடந்தமையோடு அத்துறையை மாட்டறைந்து அவ்வாறு குருந்தமர நீழலில் மெய்யடியார் கூட்டமாகிய ஆய வெள்ளம் புடைசூழ சிவஞானசோதி குருவடிவாய்வந்து உள்ளம் குளிரக் குதிகொண்ட தெய்வத்திறம் மகிழ்ந்துரைத்தார். மேலும் அத்தெய்வத்தின்பால் சிவஞானபோத உணர்விற் கலந்த இன்பத்தைக் கலவியுரைத்தல் என்ற அகத்துறைப்படுத்திக் கூறுகின்றார்.

"சொற்பா லமுதிவள் யான்சுவை
 என்னத் தொடர்ந்திவ்வனே
நற்பால்வினைத்தெய்வம்தந்தின்று
 நானிவ ளாம்பகுதிப்
பொற்பா ரறிவார் புலியூர்ப்
 புனிதன் பொறியில் வெற்பிற்
கற்பாவிய வரைவாய்
 கடிதோட்ட களவகத்தே."

சொல்லும் பகுதியில் அமிர்தம் அவள்; நான் சுவை என்றுணர விதியாகிய தெய்வம் தர நான் இவள் என்ற பேதமறக் கலந்த எமது உள்ளக் கலப்புடன் மெய்யும் கலந்து - தாய் தன்மணாளனோடு ஆடிய அகத்தைக் கூறுவதென்றால் கூறுவதெங்ஙனே, என்ற வாக்குக்கிணங்க நாம் இருவேமும் ஒருமையுற்ற அந்த இன்பக் கலப்பினை யாம் கண்ட இன்பத்தை அத்வைத இன்பத்தை - யார் காணவல்லார்? என்பது தோன்ற 'யானிவளாம் பகுதிப் பொற்பாரறிவார்" என்றார்.

—தொடரும்.

## சமயம் என்பது ஆன்மாவை

2-ம் பக்கத் தொடர்ச்சி

கம்முற்றுப்பெறுது. தமிழ்த் தலைவர்களின் கோஷ்டியொன்று இலங்கைப் பிரதமரைப் பேட்டிகண்டு இக்குறைகளினால் விளையும் தீமைகளையும் துன்பங்களையும் அவருக்கு விளக்கி மேலே காட்டிய கட்டுப் பாடுகளை நீக்கி விடும்படி அவரைக் கேட்கவேண்டும்.

இன்று எங்கள் சைவமகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் திரு. கிரிதாரி பிரசாத் B. A B. L P. P. A. (Dip) அவர்கள் எங்களுக்குப் புதியவரல்ல. எங்கள் சபையின் அரிய தொண்டனாக விளங்கிய காலஞ்சென்ற வழக்கறிஞர் திரு. அ. அருளம்பலம் அவர்கள் மூலம் நாங்கள் 1960-ம் ஆண்டு டிசம்பர்மாதத்தில் அவரை முதன்முதல் அறியக்கூடியதாக விருந்தது. இந்த மண்டபத்தில் அவர் 'திருவாசகம் என்னுந் தேன்' என்னும் பொருள்பற்றி ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர். இக்காலக் கல்லூரி மாணவர்களுக்குச் சமய உண்மைகளை விளக்குவது மிகவும் கடினமான காரியம். அவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்குத் தகுந்த விடைகள் கூறி அவர்களைச் சமயவாழ்க்கையில் புகுத்தக்கூடியவர்களுள் தலைசிறந்தவர் இம்மகாநாட்டுத் தலைவரென்று கூறினால் அது மிகையாகாது. அவர் இம்மண்டபத்தில் நிகழ்த்திய பிரசங்கத்தைக் கேட்ட மாணவர்கள் அவருடைய அறிவுரையை மேலும் நுகர வேண்டுமென விரும்பினார்கள். அவர் மாணவர்களுடைய விருப்பத்திற்கிணங்கி மறுநாள் இம்மண்டபத்தில் ஒரு சமயபாட வகுப்பை நடத்தி இந்நாட்டுக்கு இன்னுமொருமுறை வந்து அவர்களைச் சந்திப்பதாகக் கூறித் தாய்நாடு திரும்பினார்கள். அவர்கள் அங்ஙனம் கூறிய வாக்கு இன்று நிறைவேறுகின்றது.

தலைவரவர்கள் வட இந்தியாவிலுள்ள பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். பாரதநாட்டின் இளைப்பாறிய தலைவர் இராஷ்டிரபதி இராஜேந்திர பிரசாத் அவர்களின் வகுப்பைச்சேர்ந்தவர். அவருடைய குடும்பங்கள் பண்டைக்காலந் தொடக்கம் கோயம்புத்தூரில் குடியேறியிருக்கின்றார்கள். அவர் கோயம்புத்தூரில் ஒரு வக்கீலாகவும், கௌரவ நீதிபதியாகவும், ஒரு தொழிற்சாலை அதிபராகவும் கடமையாற்றி வருகின்றார். அங்ஙனம் கடமைபுரிகின்ற பொழுதிலும் அவருடைய மனம் இறைவனுடைய திருவடிகளையே பற்றிக்கொண்டிருக்கும். முன் செய்த தவத்தின் பயனாக சமயநூல்களை நன்கு கற்றிருக்கின்றார். வடமொழி ஆங்கிலம், தமிழ், இந்தி முதலிய மொழிகளிலும் சிறந்த பாண்டித்தியம் உடையவர், அவரிடத்தில் நிரம்பிய கடவுள் பக்தியுண்டு அதனால் அவருடைய நினைவு வாக்குச் செயலெல்லாம் தெய்வ சம்பந்தமாகவே விளங்கும். தமிழ் மொழியில் அவருக்கு மிகுந்த பற்று. தமிழ்மொழியிலுள்ள காவியங்கள், திருமுறைகள், தோத்திர நூல்கள், ஞானநூல்கள் எல்லாவற்றிலும் அவருக்குச் சிறந்த ஆட்சி. அவர் செய்யும் பிரசங்கங்களைக் கேட்கின்றவர்கள் இவ்வுண்மையைப் பிரத்தியட்சமாகக் காணலாம். அவர் பாரதநாடு முழுவதும் சென்று சமயப் பிரசங்கம் செய்யும் தொண்டில ஈடுபட்டிருக்கின்றார். எங்கள் அழைப்புக்கிணங்கி இங்கு வருமுன் கல்கத்தாவுக்கும் ஹைதிரபாத்துக்கும் சமய சம்பந்தமான சொற்பொழிவுகள் நிகழ்த்தச் சென்றிருந்தனர். தான் பெறும் பேறு இச்சகமெலாம் பெறவேண்டுமென்ற ஒரு உயர்ந்த இலட்சியத்தைக் கைக்கொண்டொழுகும் ஒரு புண்ணிய புருடர். அத்தகைய ஒருவர் எங்கள் சைவமகாநாட்டுக்குத் தலைவராகக் கிடைத்தது நாங்கள் செய்த புண்ணியமே. அவரை உங்கள் சார்பாகவும் எங்கள் சபையின் சார்பாக வும் வரவேற்கின்றோம்.

## அணிந்துரை அரங்கம்

**விவேகானந்தா**
திருக்குறட் கலண்டரும் டயறியும்

கலண்டர் விலை: 1-75
டயறி விலை: 1-50.

விவேகானந்தா புத்தகசாலை.
யாழ்ப்பாணம்.

ஆண்டுதோறும் விவேகானந்தா அச்சகத்தினர் வெளியிட்டு வரும் கலண்டர்களும் டயறிகளும் இவ்வாண்டும் வெளியாகியுள்ளன. வழமையிலும் சிறப்பாக வெளிவந்துள்ள கலண்டர்களில் திதி நட்சத்திரங்கள் வாக்கிய பஞ்சாங்க அடிப்படையில் குறிக்கப்பட்டுள்ளன. விடுமுறை நாட்களும்சமயவிசேட தினங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அட்டைகளும் வழமைபோல அழகுற அச்சிடப்பட்டுள்ளன.

டயறிகள் பொது அறிவு விஷயங்களும் வரவு செலவு குறிக்கும் பத்திரமும் இன்னபிற அம்சங்களும் பெற்று வெளிவந்துள்ளன.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்

1. ஊர்காவற்றுறை மேற்கு, மரியாம்பிள்ளை தொம்மைக் குட்டி
2. ஷியூர் பெண் ஆரோக்கியம்
—வழக்காளிகள்.

இல. MB/3352.

எதிராக:

1. கரம்பன், தியோகுப்பிள்ளை மரியாம்பிள்ளை
2. ஷியூர் பெண் லூர்தம்மா
3. ஊர்காவற்றுறை கரம்பன் பிரான்சிஸ் ஏபிரகாம்
4. ஷியூர் பெண் கதறீன் இன்பமலர் அல்லது தேம்பாமலர்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB/3352-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1963-ம் ஞூ மாசிமீ 16-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்ற பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா: 5295-ம். ரூபா 3000-க்கு 9-5-1960 தொடக்கம் 26-1-1962 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுதொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 525-40 சதம்.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று கரம்பனிறை "கோணி குடியிருப்பு" பர. நெ. இலா இருபத்தைந்தும் எட்டில் ஐந்தும் (பர. நெ. இலா. 25 8/5) கல்வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு யக்கோப்பிள்ளை சவரிமுத்துவிற்குரியவாதனம், மேற்கு வஸ்தியானுபிள்ளை பெண் எஸ்தரம்மாவிற்குரிபவாதனம், தெற்கு பொன்னையா பெண் சிவக்கொழுந்துவிற்கும், நாகன் கணபதிக்கும் பங்காளர்கட்குமுரிய வாதனம், இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியிற் சொரியலாய் அரைவாசி பர. நெ. இலா. ஆறு குளி நாலும் எட்டில் ஏழும் (பர. நெ இல. 6 குளி 4 7/8) அதாவது முழுவதிலும் சொரியலாய் நாலிலொரு பாகமும் கிழக்குப் பக்கத்தில் வடக்கெல்லையருகாமையில் இருக்கும் வீடுகள் முழுவதும். வீடுகட்குக் கிழக்குப் பக்கத்தில் இருக்கும் கிணறு முழுவதும். இதன் பதிவு C 256/248.

காரைநகர்
1962-ம் ஞூ மார்கழி மீ 4உ

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

M 240. 18-1-63.

## இவ்வாரம் தை 20-1-63 — 26-1-63 உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

சிறு காயங்கள் உண்டாகும் விபத்துகளுக்கு இடமுண்டு ஞாயிறு திங்கள் செவ்வாய் தொல்லைகள் மலிந்தனவாயிருக்கும். மிகுதி நாட்கள் பணப் புழக்கத்திற்கு ஏற்றவை.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

உடல்நிலைக் குழப்பங்களுக்கு இடமுண்டு. மனநிம்மதி ஒருவிதத்திலும் இருக்காது. செவ்வாய் மாலை, புதன் வியாழன் எச்சரிக்கையோடு கழிக்கப்படவேண்டும். மிகுதிப் பகுதி ஓரளவு சாதகமாயிருக்கும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

நண்பர்களுடன் சச்சரவுகளுக்கும் தவறான விளக்கங்களுக்கும் இடமுண்டு. உடல்நிலையும் ஊறுபடும், பணபளவில் பிழையான வாரமல்ல, தடைகளைத் தாண்டிவிட உம்மால் முடியும். ஈற்று இருநாட்களையும் எச்சரிக்கையோடு கழிக்கவும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

உடல்நிலை பாதிக்கப்படும். வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு. குடும்ப விவகாரங்களும் அவ்வளவு அமைதியாக இருக்காது. புதியமுயற்சிகள் தடங்கல்படும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

நீர்தொடர்ந்து தடைகளையெல்லாம் தாண்டிக்கொண்டு முயற்சிகளில் வெற்றியீட்டிக்கொண்டே இருப்பீர் பண இலாபங்களும் ஏற்படும். ஆனால் சிறுஉடல்நிலைக் குழப்பங்களுக்கு இடமுண்டு.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

வாரம் முழுவதும் உடல் நிலை பிரச்சினையாகவே இருக்கும். புதிய முயற்சிகள் தடங்கல்படும். உமது எண்ணப்படி நடந்துகொள்வது கடினமாயிருக்கக்காண்பீர். ஆனால் வாரநடுப்பகுதியின் பின் புகழும் பண இலாபமும் ஏற்படலாகும்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தொழிலீடுபாடுகளுக்குச் சிறந்த வாரம், எதிர்ப்புக்கிடையேயும் உமது எண்ணப்படி நடந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

புதுமுயற்சிகளில் வெற்றி நிச்சயம், எதிரிகளையும் போட்டியிடுவோரையும் வெல்வதும் நிச்சயம். ஆனால் மன நிம்மதி இருக்காது. சில நன் மாற்றங்கள் அண்மையில் நிகழும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

வேலை வழமையிலும் கூடுதலாக இருக்கும். நிம்மதி இருக்காது. உடல்நிலைக் குழப்பமும் தொடரும். இவ்வாரத்தில் எந்தவித உதவிக்கும் நண்பர்களை அதிகம் நம்பியிருக்க வேண்டாம்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

புதியநண்பர்கள் உதவி கிடைக்கும். பண இலாபங்களும் நிச்ச

தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## சிவபதப்பிராப்தி

ஊரெழு சிவஸ்ரீ, சதாசிவக் குருக்கள் அவர்களின் புத்திரரும், சிவஸ்ரீ ச. சோமசுந்தரக்குருக்கள் அவர்களின் சகோதரரும் சிவஸ்ரீ வைத்தியநாதக் குருக்கள் அவர்களதும், பஞ்சாக்ஷரசர்மா அவர்களதும் பிதாவும், கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்தவரும் ஆகிய சிவஸ்ரீ, பாலசுந்தரக் குருக்கள் அவர்கள் நிகழும் சுபகிருது ஞூ மார்கழிமீ 23உ திங்கட்கிழமை (7-1-63) அஸ்தமனம் 5மணி வரையில் பிரதோஷ நேரத்தில் சிவபதமடைந்தார். அவர்களின் அந்திய கடமைகள் மறுநாள் செவ்வாய்க்கிழமை பகல் சுற்றமித்திர புத்திர அன்பர்களுடன் வெகு சிறப்பாக நடந்தன, அவர்களின் ஆத்மா சாந்தியாகும்படி எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

ரூபா 2 ம் வரப்பெற்றோம்.


## அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு அமெரிக்க மானியம்

தமிழகத்தில் இருக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு யு. எஸ். வேளாண்மை இலாகா 30,021 டாலர் (ரூ. 1,42,600) மானியம் அளிக்கிறது. பயிர்களை அழிக்கும் பூச்சிகள் பற்றிய ஆராய்ச்சிக்கு இந்த மானியம் வழங்கப்படுகிறது.

இந்தியாவில் அமெரிக்க வேளாண்மைப் பொருள்களின் விற்பனைத் தொகையிலிருந்து இந்த மானியம் ரூபாயில் வழங்கப்படும். அமெரிக்கா மற்ற நாடுகளுக்கும் இம்மாதிரி மானியங்கள் வழங்குகிறது. சுதந்திர உலகின் நாடுகள் இந்த ஆராய்ச்சிகள்மூலம்பெறும் அறிவு அமெரிக்காவுக்கும் கிட்டுவதாக இருக்கும்.

இந்தியாவில் நடத்தப்படும் ஆராய்ச்சி, அமெரிக்காவிலும் தீங்கு உண்டுபண்ணும் பூச்சிகளை ஒழிக்கப் பயன்படும்என்று நம்பப்படுகிறது அமெரிக்காவில்மேற்கொண்டும் இவ்விஷயமாக ஆராய்ச்சி நடத்தப்படும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திருவதிகை - மனவாசகங்கடந்தார்
அருளிச் செய்த

# உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

(முற்றொடர் - 5)

1. ஆருறு தத்துவம்:

ஐம்புலன்

உள்ளபடி மாபூதம் ஓதினோம் உன்றனக்குக்
கள்ளமிகும் ஐம்புலனுங் கட்டுரைக்கில் — மேள்ளவே
ஓசை பரிசம் உருவம் சுவைநாற்றம்
ஆசைதரும் ஐம்புலனே யாம். 10

கொ—கூ. உன்றனக்கு மாபூதம் உள்ளபடி ஓதினோம்; (இனி), கள்ளம் மிகும் ஐம்புலனும் மெள்ள (+ஏ) கட்டுரைக்கில், ஓசை பரிசம் உருவம் சுவை நாற்றம் (ஆம் இவை) ஆசைதரும் ஐம்புலன் (+ஏ) ஆம்.

ப—ரை: உன்றனக்கு மாபூதம் உள்ளபடி ஓதினோம் - (மாணவகனே) இதுவரை உனக்குப் பஞ்ச பூதங்களையும் அவற்றின் உண்மை இயல்புகளையும் அவை பொருந்தியிருந்தபடி உரைத்தோம்; (இனி) கள்ளம் மிகும் ஐம்புலனும் மெள்ள (+ஏ) கட்டுரைக்கில் - இனி நேரிய நெறியிற் செல்லாமல் இழிந்த கள்ள வழியிலே ஆன்மாவை இட்டுச் சென்று தீமைவிளைக்கின்ற ஐந்து புலன்களைச் சொல்லுமிடத்து, ஓசை பரிசம் உருவம சுவை நாற்றம் ஆம் (இவை)- ஓசையும் ஊறும் ஒளியும் சுவையும் நாற்றமும் ஆகிய இவை, ஆசைதரும் ஐம்புலன் (+ஏ) ஆம் - ஆன்மாவுக்கு நிலையற்ற உலகவிடயங்களில் ஆசையை உண்டாக்குகின்ற ஐம்புலன்களாம்.

பொழிப்பு: சத்தம் பரிசம் உருவம் இரசம் கந்தம் (ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்) என்பன ஐந்தும் ஐம்புலன்களாம். இவை ஆன்மாவுக்கு உலகவிடயங்களில் ஆசையை விளைவிப்பன.

ஐம்பொறிகள்

ஞானேந் திரியங்கள் நன்ரு வுரைக்கக்கேள்
ஊன மிகுபூதம் உற்றிடமா — ஈனமாம்
சத்தா தியையறியுந் தானஞ் செவிதோல்கண்
அத்தாலு மூக்கென் றறி. 11

கொ - கூ: (மாணுக்கனே) ஞான இந்திரியங்கள் நன்ரு(க) உரைக்கக் கேள்; (அவை) ஊனம் மிகுபூதம் இடமா உற்று, ஈனம் ஆம் சத்தம் ஆதியை அறியும் தானம் (ஆகிய) செவி தோல் கண் அத்தாலு மூக்கு என்று அறி.

ப-ரை: ஞான இந்திரியங்கள் நன்ரு(க) உரைக்கக் கேள் - மாணுக்கனே (ஐம்புலன்களைச் சொன்னேம் இனி) ஐம்பொறிகளை நன்ருகச் சொல்லுகின்ரும் கேட்பாயாக; (அவை) ஊனம் மிகு பூதம் இடமா உற்று - அவ்வைம் பொறிகளும் ஆன்மாவுக்குத் துன்பத்தை மிகுதியாகச் செய்கின்ற பஞ்ச பூதங்கள் இடமாகப் பொருந்தி நின்று ஈனம் ஆம் சத்தம் ஆதியை அறியும் - இழிவு உடைய சத்தம் முதலிய புலன்களை அறிகின்ற, தானம் (ஆகிய) செவி தோல் கண் அத்தாலு மூக்கு என்று அறி - இடங்களாகிய காதும் தோலும் கண்ணும் நாக்கும் மூக்கும் என்று அறிவாயாக.

பொழிப்பு: ஐம்பொறிகள்: பஞ்ச பூதங்களிடமாகப் பொருந்தி நின்று சத்தம் முதலிய புலன்களை அறிகின்ற இடங்களாகிய காது தோல் கண் நாக்கு மூக்கு என்னும் ஐந்துமாம். (தொடரும்.)

## திருவருட்பயன்

(சுருக்கம்)

திருவாட்டி பொன்னு சின்னையா அவர்களின் நினைவுக் குறிப்பாக அவ்வம்மையின் மகனும் தமிழ் சைவப்பற்று மிகுந்தவருமாகிய திரு. க. சி. குலரத்தினம் ஆசிரியர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள உமாபதி சிவாச்சாரியாரின் திருவருட்பயன் என்னும் நூல் கிடைக்கப்பெற்ருேம். இதன் பத்து அதிகாரச் செய்யுள்களையும் மூதலிலும், அவற்றின் கருத்துக்களை கட்டுரை உருவில் ஈற்றிலும் இடம்பெறச் செய்து இலவசமாகி வெளியிடப்பட்ட இந்நூல் மாணவர்களுக்குப் பெரிதும் பயன் படும்.

நினைவு மலர்கள் வெளியிடுவோர் இத்தகைய்பயன் மிகு துறைகளில் நூல்களை வெளியிட்டாலென்ன?

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
சுண்டிக்குழி யாழ்ப்பாணம்
1. K. தர்மபாலனும் மனைவி
2. மகேஸ்வரியும்
—வழக்காளிகள்.
வழ. இல. MB-4532.
புத்தூர் மேற்கு
சின்னத்தம்பி பெரியதம்பி
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB-4532 ம் இலக்க வழக்கில் எனக்குககிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணிகள் 1963-ம் ஆு பெப்ரவரி மீ 16உ (16-2-63) சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 2370/- மேலும் 2000/-ரூபாவுக்கும் 1-1-62 திகதி தொடக்கம் 3-7-62 திகதி வரைக்கும் வருடமொன்றுக்கு 9% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5%வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 192-92 சதம்.

காணிகள் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று புத்தூர் வடக்கிறை "நொச்சியடி" நிலப்பரப்பு 8, இதற்கு எல்லை கிழக்கு சுப்பிரமணியம் மனைவி பராசத்தியினுதனம். வடக்கு இராமலிங்கம குமாரசாமியின் மனைவி சின்னத்தங்கச்சியினுதனம். மேற்கு முத்துக்குமாரு காசிநாதர் கைம்பெண் கனகாம்பிகையினுதனம் தெற்கு கனகசபை முத்துக்குமாருவினுதனம். இது முழுவதும் K 215/237.

2. ஷெ கோவிற்பற்று ஆவரங்கால் இறை "மணிகந்தன் ஒல்லை" நிலப்பரப்பு 4. கிணறும், வேப்பமரமும். இதற்கு எல்லை கிழக்கு நெல்லிநாதர் கைலாயரினுதனம். வடக்கும் மேற்கும் சுப்பிரமணியம் சடாசிவத்துக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை. இதில் சொரியலாய் அரைவாசிப்பங்கு K 133/199.

வி, சே. குட்டிப்பிள்ளை,
கொம்மிஷனரும்,
விலைமதிப்பாளரும்.
643 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம். 29-12-62.
M 238 18-1-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

வண்ணார்பண்ணை கிழக்கு செல்லர் நடராசா கைம்பெண்
கண்ணம்மா வழக்காளி.

எதிராக

இல M B 4125

1. சிவியாதெரு யாழ்ப்பாணம் கந்தையா தில்லையம்பலம்
2. ஷெ யூர் பெண மாணிக்கம்
எதிராளிகள்.

அராலி மேற்கு மாணிக்கம்
செல்லையா —கூட்டு எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4125ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுககாணி 1963ம் ஆு மாசி மீ 14ம் திகதி வியாழககிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 5145-ம் ரூபா 3000-க்கு 6-1-61தொடக்கம் 6-2-62 வரை 12 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 273-80 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக்கோவிற்பற்று சிவியாதெருஇறை 'சட்டம்பிதறை'' பர, நீ. இல, பத்து குளி பத்தேமுக்கால் (பர. நீ. இல 10 குளி $10\frac{3}{4}$) பனைகள் தென்னைகளும் செய்பயிர்வான்பயிர்களும் எல்லை கிழக்கு உப்புகுளம் சந்திரசேகர பிள்ளையார் கோவிலுக்குரியவாதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு சுப்பிரமணியம் சிவகுருநாதன் பெண் சரஸ்வதிக்குரிய வாதனம். தெற்கு விசுவநாதர் தம்பிமுத்து பெண் இராசம்மாவிற்குரியவாதனம். இதடங்கலும்.

காரைநகர்,
1962ம் ஆு மார்கழி மீ 12உ
வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
M 239 18-1-63


யாழ்ப்பாணம்

# —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆு ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


## இவ்வாரம் உங்கள்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

யம், ஆனல் குடும்ப விவகாரங்கள் குழம்பலாகஇருக்கும். மூத்த உடன்பிறந்தோர் உதவிப்பேறுகள் உண்டாம்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

இறுதியில் நீர் வெற்றிகொள்வது நிச்சயமாயிருந்தபோதிலும் உமது விவகாரங்களில் ஒருமாதம் வரை சில எதிர்ப்புக்களுக்கு நீர் முகம் கொடுத்து நிற்கவேண்டியிருக்கும். மனநிம்மதி இருக்காது. உடல் நிலைக் குழப்பங்களுக்கும் இடமுண்டு.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

பணமளவில் நல்லவாரம். பழைய முதலீடுகளில் பெரும் இலாபம் அடைவீர். சிறு உடல் நிலைக்குழப்பங்கள் தொடரும்.

சென்ற தைப்பொங்கல் தினத்தன்று இணுவில் பரமானந்த வாசிகசாலையும் நூல் நிலையமும் ஏற்படுத்தியபடி வாசிகசாலை மண்டபத்தில் முத்தமிழ்விழா சிறப்பாக நடைபெற்றது.

## COMMISSION SALE
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக்கோட்டு வழக்கு
இல, 6345
வழக்காளி
1. சந்தியாபிள்ளை பஸ்தியாம்பிள்ளையும்
2. பெண் ஞானப்பு,
புலோலி கிழக்கு.
எதிரி
ஷெ யூர் வேலன் கந்தையன்.

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனககு அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ்ககாணும் ஆதனங்கள் 1963ஆு மாசி மாசம் 9-ம் திகதி (9-2-1963) சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாக இருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்கள்;

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருததித்துறைக் கோயிற்பற்று, புலோலி கிழக்கு சிங்கபாகு தேவன் குறிச்சி 'அரியயிலுன் வடிலி' நி பர. 4 3/8 அதற்குட்பட்ட பனைகளும் தென்னைகளும். எல்லை கிழக்கும், வடககும், மேற்கும் ஒழுங்கை. தெற்கு நாகன் கணபதிகரும் மறுபேருக்கும் உடைய ஆதனம். இவ்வெல்லைக் குட்பட்ட யாவற்றிலும் சொரியலாய் அரைவாசி A 388/12 இல் பதியப்பட்டது.

2. ஷெ புலோலி கிழக்கு வென்றிபாகுதேவன் குறிச்சி "சேனையவததை" நீ. பர, 35. ஷெ வீடு 1. இதில் வடமேற்குப் புறமாக 1/3 கந்தப்பர் வேல் முருகு உலாந்தா 1917-ம் ஆண்டு ஐப்பசி மாசம் 1960 தேதியில் தயாரித்த 220 இலக்கப்படத்தின் படியும் பிரிவிடல் வழக்கு 17192 இலக்கத்தில் அணைக்கப்பட்டதும், குறித்த படத்தின்படி 10 நம்பர் துண்டு நீ- பர. 2 குளி 13, 13/16 உம். எல்லை கிழக்கும் மேற்கும் நாகன் வேலனுக்கும் மறுபேருக்கும், வடக்கு ஒழுங்கை, தெற்கு தாமர் ஆளவாப்பிள்ளைக்கும், வயிரவன் பெண் சின்னுச்சிககும். இவ்வெல்லைக்குட்பட்ட நிலத்தில் நி. பர. 1 குளி 9. 5/16 உம், மேற்குப்புறமாக உள்ள வீட்டு சொரியலாய் அரைவாசியும் அதற்குரிய பயிரும் A 388/13 இல் பதியப்பட்டது.

| | |
|---|---|
| தீர்வைததொகை:- | 1740-00 |
| வட்டி 1000/-க்கு 21-4-1959வரை 8வீதம் | 120-00 |
| வட்டி 1860/-க்கு 6-10-60 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீதம் — | 170-50 |
| கோட்டுச் செலவு — | 242-04 |
| மொத்தம் | 2272-54 |
| வரவு | 750-00 |

கா. முத்துக்குமாருஐயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer,
சந்நிதிவேல்,
பருத்தித்துறை. 13-1-63,
M 241. 18-1-63.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் ... பிள்ளை சின்னத்துரை அவர்களால் 18-1-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர், நம. சிவபிரகாசம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org